க.பொ.த. உயர்தரம், பல்கலைக்கழக மாணவர்களுக்குரியது

# GEOGRAPHY

## NEW CARTOGRAPHIC TECHNIQUES

# நவீன படவரைகலையியல் நுட்பங்கள்




LBD Publication


Lanka Book Depot-Pvt Ltd.
077 3911998
lankabookdepot@gmail.com
www.lankabookdepot.com



PROF. FAREENA RUZAIK
S.AKSHAYAN

# நூல்விபரப் பட்டியல் - BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நவீன படவரைகலையியல் நுட்பங்கள் (GIS, GPS & RS) |
| நூலாசிரியர்கள் | : | பேராசிரியர் பரீனா றுஸைக், ச.அக்ஷயன் |
| முதலாம் பதிப்பு | : | 2024 |
| பக்கங்கள் | : | 116 (112+iv) |
| வெளியீடு | : | லங்கா புத்தகசாலை (தனியார்) வரையறுக்கப்பட்டது. கொழும்பு-13 |
| கணனி வடிவமைப்பு | : | ச.அக்ஷயன் |

| | | |
|---|---|---|
| TITLE OF THE BOOK | : | New Cartographic Techniques (GIS, GPS & RS) |
| AUTHOR | : | Prof. Fareena Ruzaik<br>S. Akshayan |
| FIRST EDITION | : | 2024 |
| PAGES | : | 116 (112+iv) |
| PUBLISHED BY | : | Lanka Book Depot (Pvt) Ltd.<br>Colombo-13 |
| COMPUTER DESIGNING | : | S. Akshayan |




CamScanner

# பொருளடக்கம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | புவி இடம்சார் தொழினுட்பம் அறிமுகம் | 01 |
| 2. | பூகோள வழிகாட்டல் செய்மதி முறைமை | 03 |
| 3. | தொலையுணர்வு தொழினுட்பம் | 20 |
| 4. | புவியியல் தகவல் முறைமை | 35 |
| 5. | கடந்தகால வினாவிடைகள் | 56 |
| | பின்னிணைப்பு கலைச்சொற்கள் | 98 |




CamScanner

## நூலாசிரியர்கள் உரை

நவீன படவரைகலையியல் என்ற தலைப்பில் வெளிவரும் இந்நூலானது உயர்தரத்தில் புவியியலைக் கற்கும் மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டாலும், பல்கலைக்கழகங்களில் மற்றும் வெளிவாரிப் பட்டப்படிப்புக்களில் புவியியலைக் கற்கும் மாணவர்களுக்கும் அடிப்படை அறிவையும் வழங்கக்கூடியதாக எழுதப்பட்டுள்ளது.

நவீன படவரைகலையியல் என்ற தலைப்பினுள் அடங்குகின்ற விடயங்களைப் பெரும்பாலும் புவி இடம்சார் தொழினுட்பம் அல்லது புவிவெளிசார் தொழினுட்பம் எனவும் அழைக்கின்றனர். அந்தவகையில் புவிவெளிசார் நுட்பத்தினுள் முக்கியமாக உள்ளடங்கும் GIS, GPS, RS ஆகிய மூன்று விடயங்களையும் தெளிவுபடுத்துவதுடன், பின்பகுதியில் இணைக்கப்பட்டுள்ள கடந்த கால வினாக்களும் விடைகளும் விடயம் தொடர்பாக வினாவப்படும் வினாக்களையும், அவற்றுக்கான விடைகள் அமையும் தன்மையையும் எடுத்து விளக்குகின்றது.

இந்நூலானது புவி இடம்சார் தொழினுட்பம் அறிமுகம் என்பதில் தொடங்கி GPS, RS, GIS என்ற ஒழுங்கில் அமைந்து காணப்படுகின்றது. கற்ற விடயங்களை விளங்கிக்கொள்வதற்காகவும், பரீட்சையை முகம்கொடுப்பதற்காகவும் கடந்தகால வினாக்களும், விடைகளும் காணப்படுகின்றன. இறுதியில் புவியியல் தகவல் முறைமையுடன் தொடர்புடைய ஆங்கில கலைச்சொற்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

நூலை உருவாக்குவதற்கு துணைபுரிந்த இயற்கைக்கும், இறைவனுக்கும் முதலில் நன்றி கூறிக்கொண்டு, நூலாசிரியர்கள் பற்றிய அறிமுகத்தினை வழங்கிய புவியியல் துறை பேராசிரியர் எம்.கலீல்(சிரேஸ்ட விரிவுரையாளர் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்) அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நூலாசிரியர்கள்

# 01. புவி இடம்சார் தொழினுட்பம் அறிமுகம்
## An Introduction to Geospatial Technology

புவியினுடையதும், மனித சமூகத்தினதும் புவியியல் நிலவரைபடமாக்கல் மற்றும் பகுப்பாய்வு செய்வதற்குப் பயன்படும் நவீன கருவிகளின் உள்ளடக்கத்தினை விபரிக்கின்ற ஒன்றாக புவி இடம்சார் தொழினுட்பம் எனும் பதம் பயன்படுத்தப்படுகின்றது.

**Geospatial Technology** என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் புவி இடம்சார் தொழினுட்பமானது, புவிசார் தொழினுட்பம், புவிவெளிசார் தொழினுட்பம் ஆகிய பதங்களாலும் அழைக்கப்படுவதுடன், நவீன படவரைகலை நுட்பத்தின் முக்கியமான ஒரு அடிப்படை தொழினுட்பமாகவும் காணப்படுகின்றது. அந்தவகையில் புவி இடம்சார் தொழினுட்பமானது படம்வரைதல் மற்றும் பகுப்பாய்வுடன் தொடர்புடைய எல்லா நவீன தொழினுட்ப செயற்பாடுகள் மற்றும் முறைகளையும் உள்ளடக்கிய பரந்ததொரு பரப்பாகக் காணப்படுகின்றது. அந்தவகையில் புவி இடம்சார் தொழினுட்பமானது பின்வரும் முக்கியமான விடங்களை உள்ளடக்கியுள்ளது.

- புவியியல் தகவல் முறைமை (GIS)
- செய்மதி வழிகாட்டல் முறைமை (GNSS)
- தொலையுணர்வு படமாக்கல் (RS)
- நில அளவையியல் (Land Surveying)
- இணைய நிலவரைபடங்கள் (Map on Web)
- நவீன திசைகாட்டிகள் (Compass)



CamScanner